செய்தி வெளியீடு எண்: 408 நாள் : 30.07.2013

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று **(30.7.2013)** முதுமலை தெப்பக்காடு யானைகள் முகாம் மற்றும் வனவிலங்குகள் சரணாலயம் ஆகிய இடங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்தார்கள்.

நீலகிரி மாவட்டம், கோடநாட்டிலிருந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று சாலை வழியாக தெப்பக்காடு யானைகள் முகாமிற்கு சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள். தெப்பக்காடு முகாமில் உள்ள யானைகளுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு வகைகள் குறித்தும், அவைகள் பராமரிக்கப்படும் விதம் குறித்தும் வன அலுவலர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்கள். பின்னர் யானைகளுக்கு பலா, வாழை மற்றும் கரும்பு போன்ற உணவுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முதுமலை வனவிலங்குகள் சரணாலயத்தையும் பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முதுமலை தெப்பக்காடு யானைகள் முகாம் மற்றும் வனவிலங்குகள் சரணாலயம் செல்லும் வழியில், வழிநெடுக பொது மக்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது மக்கள் அளித்த உற்சாக வரவேற்பை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் வனத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * * *

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 30.7.2013